**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.**

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 06 ஆம் நாள் சனிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், வைகாசித்திங்கள் 23 ம் நாள்

**E.P.No. 4/2025**

**in**

**O.S.No. 115/2013**

M.K.செல்வன் ... மனுதாரர்/வாதி/D.Hr

/எதிராக/

1. M.ரங்கசாமி
2. K.ஜெயபிரகாஷ்
3. K.சக்திவேல் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்/J.Ds

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பாக கடந்த 07.04.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்/D.Hr தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வேதாச்சலம், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

**உத்தரவு**

மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் தீர்ப்பாணைப்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அமைத்துள்ள கம்பிவேலி அமைப்பை அகற்றி

கொடுக்கும் பொருட்டு எதிர்மனுதாரர்களுக்கு ஆர்டர் 21 ரூல் 32 சிபிசி படி நோட்டீஸ் அனுப்பியும் கம்பிவேலியை அகற்றாவிடில் நீதிமன்ற அமீனா மூலம் செயலுறுத்துக்கட்டளையை நிறைவேற்றி தர வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் ஆர்டர் 21 ரூல் 11(2)ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :–</u>**

i) அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் கடந்த 24.06.2016 ம் தேதியன்று தாவா ஏ செட்யூல் சொத்திற்கு தாவா பி செட்யூல் சொத்தில் தெற்கோரத்தில் அமைந்துள்ள 12 அடி அகல கிழமேல் தாவா ஏபி தடத்தில் வாதி ஆட்கள், கால்நடைகள், வண்டி வாகன வகையறாக்கள் ஓட்டி அனுபவிக்க பாத்தியமுண்டு என்று விளம்புகை செய்தும், தாவா ஏ பி தடத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ தாவா தடத்தை அடைத்தோ அல்லது வேறு எவ்வகையிலோ இடையூறு விளைவிக்க கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும், தாவா ஏபி தடத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பிரதிவாதிகள் அமைத்துள்ள கம்பிவேலி அமைப்பை பிரதிவாதிகள் மூன்று மாத காலத்திற்குள் அப்புறப்படுத்தி கொடுக்கவும் தவறும் பட்சத்தில் நீதிமன்ற அலுவலர் மூலம் அப்புறப்படுத்திக் கொடுக்க செயலுறுத்துக்கட்டளை பிறப்பித்தும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தீர்ப்பாணைப்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அமைத்துள்ள கம்பிவேலி அமைப்பை அகற்றி கொடுக்கும் பொருட்டு எதிர்மனுதாரர்களுக்கு ஆர்டர் 21 ரூல் 32 சிபிசி படி

நோட்டீஸ் அனுப்பியும் கம்பிவேலியை அகற்றாவிடில் நீதிமன்ற அமீனா மூலம் செயலுறுத்துக்கட்டளையை நிறைவேற்றி தர உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

2. மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டுளளார்கள்.

3. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

<u>4. தீர்வு:–</u>

மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் கடந்த 24.06.2016 ம் தேதியன்று தாவா சொத்தைப் பொறுத்து வாதிக்கு தாவாவில் கோரியுள்ள விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்று தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே மேற்படி தீர்ப்பாணைப்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவா சொத்தில் அமைத்துள்ள கம்பிவேலி

அமைப்பை அகற்றி கொடுக்கும் பொருட்டு எதிர்மனுதாரர்களுக்கு ஆர்டர் 21 ரூல் 32 சிபிசி படி நோட்டீஸ் அனுப்பியும் கம்பிவேலியை அகற்றாவிடில் நீதிமன்ற அமீனா மூலம் செயலுறுத்துக்கட்டளையை நிறைவேற்றி தர உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

5. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது அ.வ.எண்.115/2013 என்ற வழக்கானது இம்மனுவின் மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டு கடந்த 24.06.2016 அன்று தாவா ஏ செட்யூல் சொத்திற்கு தாவா பி செட்யூல் சொத்தில் தெற்கோரத்தில் அமைந்துள்ள 12 அடி அகல கிழமேல் தாவா ஏபி தடத்தில் வாதி ஆட்கள், கால்நடைகள், வண்டி வாகன வகையறாக்கள் ஓட்டி அனுபவிக்க பாத்தியமுண்டு என்று விளம்புகை செய்தும், தாவா ஏ பி தடத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ தாவா தடத்தை அடைத்தோ அல்லது வேறு எவ்வகையிலோ இடையூறு விளைவிக்க கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும், **தாவா ஏபி தடத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பிரதிவாதிகள் அமைத்துள்ள கம்பிவேலி அமைப்பை பிரதிவாதிகள் மூன்று மாத காலத்திற்குள் அப்புறப்படுத்தி கொடுக்கவும் தவறும் பட்சத்தில் நீதிமன்ற அலுவலர் மூலம் அப்புறப்படுத்திக் கொடுக்க ஒரு செயலுறுத்துக்கட்டளை பிறப்பித்தும் ஒருதலைப்பட்ச** தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

6. இந்நிறைவேற்று மனுவானது மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் மேற்படி தீர்ப்பாணைப்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனு சொத்தில்

அமைத்துள்ள கம்பிவேலி அமைப்பை அகற்றி கொடுக்கும் பொருட்டு எதிர்மனுதாரர்களுக்கு ஆர்டர் 21 ரூல் 32 சிபிசி படி நோட்டீஸ் அனுப்பியும் கம்பிவேலியை எதிர்மனுதாரர்கள் அகற்றாவிடில் நீதிமன்ற அமீனா மூலம் செயலுறுத்துக்கட்டளையை நிறைவேற்றி தர உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது இம்மனுவானது மனுதாரர்களால் கடந்த 02.08.2017 அன்று தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் 07.08.2017 அன்று திருப்பப்பட்டுள்ளது. பின்னிட்டு இம்மனுவானது கடந்த 04.01.2025 அன்று மனுதாரர்களால் இம்மனுவை திரும்ப தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 2698 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்கோரி இ.ம.எண்.1/2025 தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் கடந்த 17.03.2025 அன்று அனுமதிக்கப்பட்டு இம்மனுவானது கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது அ.வ.எண்.115/2013 வழக்கில் இந்நீதிமன்றம் கடந்த 24.06.2016 தேதியில் வழங்கிய தீர்ப்புரையில் வாதி தாவா ஏ செட்யூல் சொத்திற்கு **தாவா பி செட்யூல் சொத்தில் தெற்கோரத்தில் அமைந்துள்ள 12 அடி அகல கிழமேல் தாவா ஏபி தடத்தில் வாதி ஆட்கள், கால்நடைகள், வண்டி வாகன வகையறாக்கள் ஓட்டி அனுபவிக்க பாத்தியமுண்டு என்று விளம்புகை செய்தும்,** தாவா ஏ பி தடத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ தாவா தடத்தை அடைத்தோ அல்லது வேறு எவ்வகையிலோ இடையூறு விளைவிக்க கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா ஏபி தடத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பிரதிவாதிகள் அமைத்துள்ள கம்பிவேலி அமைப்பை பிரதிவாதிகள் மூன்று மாத காலத்திற்குள் அப்புறப்படுத்தி கொடுக்கவும் தவறும் பட்சத்தில் நீதிமன்ற அலுவலர் மூலம்

அப்புறப்படுத்திக் கொடுக்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பித்தும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

8. மேற்படி முதல்நிலை தீர்ப்பாணைக்கு எதிராக நாளது தேதிவரை எவ்வித மேல்முறையீடுகளும் உபய தரப்பினர்களால் செய்யப்படவில்லை என்று மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேலும் வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.115/2013 வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் கடந்த 24.06.2016 அன்று இந்நீதிமன்றத்தால் ஒருதலைப்பட்ச தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டு மேற்படி தீர்ப்பாணை தற்போது வரை மாற்றியமைக்கப்படாமல் செயல்படுத்தத்தக்க தீர்ப்பாணையாக உள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி தீர்ப்பாணையின் நிறைவேற்றம் தற்போது வரை தடை செய்யப்படவில்லை. ஆகையால் இந்நிறைவேற்று நீதிமன்றத்திற்கு மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்றம் செய்ய நடவடிக்கை எடுப்பதை தவிர வேறு வழி இல்லை. மேலும் எதிர்மனுதாரர்களுக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பியும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைப்பட்ச உத்தரவுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

9. வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து அ.வ.எண்.115/2013 வழக்கில் இந்நீதிமன்றம் கடந்த 24.06.2016 தேதியில் வழங்கிய தீர்ப்புரையில் 12 அடி அகல கிழமேல் தாவா ஏபி தடத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பிரதிவாதிகள் அமைத்துள்ள கம்பிவேலி அமைப்பை பிரதிவாதிகள் மூன்று மாத காலத்திற்குள் அப்புறப்படுத்தி கொடுக்கவும் தவறும் பட்சத்தில் நீதிமன்ற அலுவலர் மூலம் அப்புறப்படுத்திக் கொடுக்க செயலுறுத்துக்கட்டளை பிறப்பித்து உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் மேற்படி

கம்பிவேலி அமைப்பை எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் நாளதுவரை அப்புறப்படுத்தி கொடுக்காமல் இருந்து வருகிறார்கள் என்பது ஊர்ஜிதமாகிறது.

10. எனவே மேலே கண்ட பரிசீலனைகளின்படியும், விவாதங்களின்படியும் மனுதாரர்/வாதியால் அ.வ.எண்.115/2013 என்ற வழக்கானது இம்மனுவின் மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் கடந்த 24.03.2016 அன்று முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, மேற்படி தீர்ப்பாணையில் 12 அடி அகல கிழமேல் தாவா ஏபி தடத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் அமைத்துள்ள கம்பிவேலி அமைப்பை பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் மூன்று மாத காலத்திற்குள் அப்புறப்படுத்தி கொடுக்கவும் தவறும் பட்சத்தில் நீதிமன்ற அலுவலர் மூலம் அப்புறப்படுத்திக் கொடுக்க செயலுறுத்துக்கட்டளை பிறப்பித்து உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் மேற்படி கம்பிவேலி அமைப்பை எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் நாளதுவரை அப்புறப்படுத்தி கொடுக்காமல் இருந்து வருகிறார்கள் என்பது ஊர்ஜிதமாகியுள்ளதாலும், மேற்படி முதல்நிலை தீர்ப்பாணைக்கு எதிராக நாளது தேதிவரை எவ்வித மேல்முறையீடுகளும் உபய தரப்பினர்களால் செய்யப்படவில்லை என்பதாலும் மேற்படி அ.வ.எண்.115/2013 வழக்கில் கடந்த 24.06.2016 அன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை தற்போது வரை மாற்றியமைக்கப்படாமல் செயல்படுத்தத்தக்க தீர்ப்பாணையாக உள்ளதாலும் இம்மனுவில் மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும், இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனு சொத்தான தாவா 12 அடி அகல கிழமேல் ஏபி தடத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அமைத்துள்ள கம்பிவேலி அமைப்பை நீதிமன்ற அமீனா மூலம் அப்புறப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா 29.06.2026. படி மெமோ செலுத்த ஒரு வார கால அவகாசம் வழங்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026—ம் ஆண்டு ஜூன் மாதம் 06 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.06.06 18:03:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :— இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :— இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.06.06 18:03:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.